# தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்,** ஜனவரி 8, 1961, இந்தியானா, அமெரிக்கா

89. இங்கே இந்த மூப்பர்கள் சிங்காசனங்களின் மேல் தங்கள் தலையில் கிரீடமணிந்தவர்களாய் வீற்றிருக்கிறார்கள். 5ம் வசனத்திலிருந்து நாம் ஆரம்பிக்கப் போகிறோம்.

"**அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன**".

*வெளி. 4:5*

90. ஓ, நான் இதை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? எனது மேற்சட்டை எனக்கு பொருத்தமாக இருப்பது போல் உணருகிறேன். நான் ஆவிக்குரிய மேற்சட்டையைக் குறித்துக் கூறுகிறேன். நீங்கள் அதை அறிவீர்கள்.

91. ’சிங்காசனத்திலிருந்து இப்பொழுது நாம் இந்த சிங்காசனத்தைக் குறித்து சில நிமிடங்கள் பேசுவோமாக. இது இரக்கத்தின் சிங்காசனமல்ல; இரக்கத்தின் சிங்காசனத்தின் வேளை முடிந்துவிட்டது. இனிமேல் இரக்கம் இல்லை. அச்சிங்காசனத்தில் இரக்கம் இல்லை. நாம் என்ன செய்ய போகிறோம்.... நியாயாசனம் எவ்வாறு கிறிஸ்துவின் நியாயாசனமாக ஆகப்போகிறது? எவ்வாறு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆசனமாக ஆகப் போகிறது? **அப்பொழுது அதில் இரக்கம் இருக்குமா? அங்கே ஒரு துளி இரக்கமும் இருக்கப்போவதில்லை. நியாயாசனத் தண்டையில் நீங்கள் இரக்கம் வேண்டும் என்று கதறும் போது, இனிமேல் கதறவே முடியாது என்ற**

**அளவுக்கு கதறின போதிலும் அங்கே கொஞ்சம்கூட இரக்கம் இராது போய்விடும். நீங்கள் ஆகாயத்தில் கத்தித் தீருமட்டும் கதறுவீர்கள், ஏனெனில் அங்கே இரக்கமே இராதுபோகும்.**

92. **இப்பொழுதே இரக்கத்தின் நாள் உள்ளது.** இப்பொழுது நாம் பழைய ஏற்பாட்டில் சிறிது திரும்பிப்போய், இரக்கமானது என்ன என்பதை நாம் அங்கே காண்போம். திரும்பிப்போய், இந்த சிங்காசனத்திற்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்ப்போம். இந்த சிங்காசனம் உண்மையிலேயே நியாயத்தீர்ப்பு ஆசனம்தான். இன்றைக்கு இரக்கம் இருப்பதின் காரணம் என்னவெனில், பாவப்பிராயச்சித்த இரத்தத்தால் கிருபாசனமானது தெளிக்கப்பட்டிருக்கிறது. நியாயாசனத்தின் மீது அந்த இரக்கமானது இருக்கிற வரையிலும் அது நியாயாசனமாக விளங்காது, அது இரக்காசனமாகவே இருக்கிறது. ஏனெனில் நியாயத்தீர்ப்பினின்று காக்கும்படி ஒருவர் மரித்திருக்கிறார். அதை

நீங்கள் கண்டுணர்ந்தீர்களெனில், 'ஆமென்" என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்" என்று கூறுகிறார்கள் – ஆசி). கிருபாசனத்தின் மீது இரத்தமானது காணப்படுகிற வரையிலும், நியாயத்தீர்ப்பை தடுத்து நிறுத்துவதற்காக ஒருவர் மரித்துள்ளார் என்பதை அது காட்டுகிறது. ஆனால் சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பொழுது, கிருபாசமானது நியாயாசனமாக ஆகிவிடுகிறது.

93. இங்கே புதிய ஏற்பாட்டிலுங்கூட, பரிசுத்த ஸ்தலத்தில் நியாயாதிபதி தன் ஆசனத்தில் வீற்றிருக்கிறார். பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் அந்த நியாயாசனம் முழுவதும் புகையால் நிறைந்தது. அது என்னவாயிருக்கிறது? சீனாய் பர்வதத்தில் இருந்த நியாயத்தீர்ப்பு ஆசனத்தைப்போல் அது உள்ளது. தேவனுடைய சிங்காசனத்தைவிட்டு இரக்கமானது அகன்றுவிட்டது. **இரக்கமில்லாமல் தேவன் உலகை நியாயந்தீர்ப்பார். அதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்?**

94. **அந்நாளில் அவர் அங்கீகரிக்கும் காரியம் ஒன்றேயொன்று தான் உண்டு. அது என்ன? அதுதான் இரத்தம். கோபமுள்ள தேவனை சாந்தப்படுத்துவது இரத்தம் ஒன்றுதான்.**

95. ஆதாமும் ஏவாளும் தங்கள் நிர்வாணத்தை மூடிட, எந்தவொரு மெதோடிஸ்ட்டும், பாப்டிஸ்ட்டும், ப்ரெஸ்பிடேரியனும் அல்லது பெந்தெகொஸ்தேகாரரும் செய்ய முடிந்திருக்கிற அளவுக்கு, ஒரு ஆடையைத் தயாரித்தார்கள். ஆனால் பார்க்கக் கூடாதபடி தேவனுடைய பார்வையை அவ்வாடை மறைக்க முடியாது. எனவே, அவர் ஒரு மிருகத்தைக்கொன்று, இறந்து போன மிருகத்தின் தோலை எடுத்து அவர்களுக்கு மூடுவித்தார். **இரத்தமானது அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அதுவே அவருடைய கோபத்தை தடுத்து நிறுத்தியது. ஏனெனில் ஒன்று தனது ஜீவனை கொடுத்திருக்கிறது.** ஓ தேவனே!

96. அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள்! தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே. **அது அவருடைய சொந்த குமாரனின் இரத்தம்தான் என்பதை அவர் காண்கிற பொழுது, நியாயந்தீர்க்க முன்வரமாட்டார். ஏனெனில் தேவன் தமது குமாரனுக்கு அளித்த ஈவாகும் அது;** தாம் உலகத்தோற்ற முன் தெரிந்து கொண்டவர்களை மீட்பதற்காக அவருக்கு அவர் அளித்த ஈவாகும். அதுவே தேவனை நியாயாசனத்தில் இருந்து திரும்பக் கொண்டுவருகிறது. ஆனால் அந்த இரத்தமானது நீக்கப்பட்ட பிறகு, முன்னறிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரும் விலையேறப்பெற்ற அவருடைய சரீரத்தினுள் வந்து சேர்ந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டு, அவருடைய சபையானது ஆயத்தப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு,

அப்பொழுது ஜனங்களின் மேல் தேவனுடைய கோபாக்கினையானது வருகிறது.

97. **ஒருபோதும் அவ்விடத்தில் நிற்க விரும்பாதீர்கள்.** ஓ, சகோதரனே! நான் ஒரு இயந்திரத் துப்பாக்கி முன் நின்று, நான் துண்டு துண்டாக சுட்டுக்கொல்லப்பட்டாலும் பரவாயில்லை; நான் அங்குலம் அங்குலமாக அறுக்கப்படட்டும், பரவாயில்லை; எனக்கு என்ன வேண்டுமானாலும் சம்பவிக்கட்டும். கொலம்பஸ் துறவிகளின் சபதத்தைப்போல் .... (நைட்ஸ் ஆஃப் கொலம்பஸ் Knighs of Columbus என்பது, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தில் 1882ம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒரு சர்வதேச சங்கமாகும் இது – மொழிபெயர்ப்பாளர்). அவர்கள் எனது வயிற்றை அறுத்து திறந்து என்னிலுள்ள கந்தகம் மற்றும் இன்னபிற இரசாயனங்களை யெல்லாம் சுட்டெரிக்கட்டும், எனது கரங்களும், கைகளும் துண்டாக்கப்படட்டும், எனக்கு என்ன நேரிட்டாலும் சரி, **ஆனால் ஒருபோதும் தேவனுக்கு முன்பாக அந்த வெள்ளை**

## சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நான் நிற்கவே வேண்டாம்.

98. ஓ, நான் இந்த சிறிய சிங்காசனத்தை கிறிஸ்துவின் ஆசனத்தண்டையில் எடுத்துக்கொண்டு போய், அவரது இரத்தத்தை ஏற்றுக்கொள்ளட்டும். கர்த்தாவே, நான் என் கையில் வேறெதுவும் என்னுடன் கொண்டுவரவில்லை. இயேசுவின் இரத்த ஊற்றைத்தவிர (நான் அறிந்ததெல்லாம் அதைப்பற்றி மாத்திரமே) வேறே ஊற்றை நான் அறியேன், இதுவே எனது நம்பிக்கையும் ஆதரவும் இயேசுவின் இரத்தம் அன்றி வேறெ நம்பிக்கை இல்லை.

99. எட்டி ப்ரூயிட் இவ்வாறு எழுதியதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அவர் ஒரு கிறிஸ்தவனாக இருந்தபோது, ஊக்கமான கிறிஸ்தவனாக இருந்தபோது, அவரது பாடல்களில் வாங்கிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. "ஒருநாள் நான் ஒன்றை இயற்றுவேன், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்" என்று கூறினார். மக்கள் பக்திப் பாடல்களை இன்னும் கூடுதலாக

நவீனமான ஒன்றை விரும்பிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாளிலே ஆவியானவர் அவரை ஆட்கொண்டபோது, அவர் எழுதுகோலை எடுத்து பின்வருமாறு எழுதினார்.

எல்லாருக்கும் மா உன்னதர் கர்த்தாதி கர்த்தரே மெய்யான தேவ மனிதன் நீர் வாழ்க – இயேசுவே! நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான் வேறஸ்திபாரம் மணல்தான்.

வேறஸ்திபாரம் மணல்தான்.

100. சபையானாலும், நண்பனானாலும், சத்துருவானாலும், தேசமானாலும், ஐசுவரியங்களானாலும், வறுமையானாலும், நன்மையானாலும், அது என்னவாயிருந்தபோதிலும், வேறெந்த அஸ்திபாரமும் சரியும் மணல்தான். அவை யாவும் ஒழிந்துபோக வேண்டியது தான். அதுதான் நடக்கும். ஆனால்: நான் நிற்கும் உறுதியான பாறை கிறிஸ்துதான் வேறெந்த அஸ்திபாரமும் சொரி மணல்தான் (அதை நினைவில் கொள்ளுவீர்)